*It is requested that all communications should be addressed to The Registrar, Thiruvalluvar University and not to any person.*

www.tvu.edu.in
Phone No: 0416-2274746 / 2274747
Fax: (0416) - 2274748

# திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
# THIRUVALLUVAR UNIVERSITY
**(NAAC Accreditation 'B' Grade)**
**(State University)**
**SERKKADU, VELLORE – 632 115.**

**முனைவர். வெ.பெருவழுதி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,**
**பதிவாளர் (பொ)**

கடித எண். தி.ப/ப//2019/ நாள்:24.07.2019

பெறுநர்
அனைத்து கல்லூரி முதல்வர்கள்
திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது.

அய்யா / அம்மா,

பொருள்: திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் - ஆதி திராவிடர் நலம் - போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம் - 2019-2020 ஆம் கல்வியாண்டிற்கு – பாடப்பிரிவுக்கான கால அளவு விவரம் - கோருதல் தொடர்பாக.

பார்வை: இயக்குநர், ஆதிதிராவிடர் நல இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். எல்2/17408/2017 நாள் 16.07.2019

*****

பார்வையில் காணும் கடிதத்தில் இயக்குநர், ஆதிதிராவிடர் நல இயக்ககம் அவர்கள் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்ட இணையவழி செயலாக்கத்தில் பல்வேறு வகையான பாடப்பிரிவுகளில் பயிலும் மாணவர்களின் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களானது பெறப்படுகிறது என்றும் இதில் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் ஒரே மாதத்தில் வகுப்புகள் தொடங்கப்படுவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக மாணவர் பயிலும் பாடப்பிரிவின் முழு காலஅளவுக்கான பராமரிப்புப்படி அல்லது சம்மந்தப்பட்ட பாடப்பிரிவின் சரியான கல்வி ஆண்டுக்கான 10 மாத கால பராமரிப்புப்படி வழங்கும் பொருட்டு, கல்வி உதவித்தொகைக்கான இணையதள மென்பொருளில் கல்வி ஆண்டுக்கான கால அளவை பாடப்பிரிவிற்கு ஏற்றவாறு மாற்றம் செய்ய வேண்டியுள்ளதால் 2019-2020 ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் உள்ள அனைத்து பாடப்பிரிவுகளின் கால அளவு, அப்பாடப்பிரிவுகளின் மொத்த வேலை நாட்கள் மற்றும் தேர்வு துவங்கும் நாள் மற்றும் முடிவுறும் நாள் ஆகிய விவரங்களை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து விரைந்து அனுப்புமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, **<u>மேற்குறிப்பிட்ட விவரங்களை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 31.07.2019 தேதிக்குள்</u>** (both soft copy (MsWord file) and hard copy) **<u>tvurgrscstsection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் தபால் மூலமாகவும்</u>** இப்பல்கலைக்கழகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

பதிவாளர் (பொறுப்பு)

## இணைப்பு–1

| வ.எண் | பாடப்பிரிவின் பெயர் | வருடம் | வகுப்பு துவங்கும் தேதி | வகுப்பு முடிவடையும் தேதி | பாடப்பிரிவின் மொத்த வேலை நாட்கள் | தேர்வு துவங்கும் தேதி (தோராயமாக) | தேர்வு முடிவு பெறும் நாள் (தோராயமாக) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பி.எ. தமிழ் (மாதிரி பதிவு) | 1 | | | | | |
| | | 2 | | | | | |
| | | 3 | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

குறிப்பு– இப்படிவத்தில் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கல்லூரிகளில் உள்ள அனைத்து பாடப்பிரிவுகள் சார்பான விவரங்களை பூர்த்தி செய்து அதனை cadw.tn@nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 10.08.2019 க்குள் அனுப்பவும்

ஒம்/-க.வீ.முரளீதரன்
ஆதிதிராவிடர் நல இயக்குநர்

[signature] 2/2
ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக

15/07/19